



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2024) தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை துணைச் செயலாளர் மு.பிரதாப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திடீர் ஆய்வு!

## அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக பணியாற்ற வலியுறுத்தல்!

தூத்துக்குடி, நவ.15-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2024) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் திடீராய்வு மேற்கொண்டார்.

தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வருகின்ற நபர்கள் அலுவலகத்தில் உள்ள பல்வேறு பிரிவுகள் குறித்து எளிதில் உள்ள வசதிகளை பார்வையிட்டார்.

வட்டாட்சியர் அலுவலகத்தில் நில அளவைப் பிரிவு, சமூக பாதுகாப்புத் திட்ட பிரிவு, வட்ட வழங்கல் பிரிவுகளுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, இலவச வீட்டுமனைப் பட்டா, பட்டா மாறுதல்கள், மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்ட விவரங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டறிந்து, பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களிடம் அறிவுறுத்தினார்.

அரசின் பல்வேறு துறைகள் இருந்தாலும் பொதுமக்களிடம் நேரடியாக தொடர்பு கொண்ட வருவாய்த்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நீங்கள் அனைவரும் பொதுமக்களின் விண்ணப்பங்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொண்டு, சாதிச்சான்றிதழ், வருவாய்ச் சான்றிதழ் உள்ளிட்ட சான்றிதழ்கள், மின்னணு குடும்ப அட்டை, பட்டா மாறுதல்கள் ஆகிய சேவைகள் விரைந்து கிடைத்திடவும், முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட நலத்திட்டங்கள் தகுதியான அனைத்து நபர்களுக்கும் கிடைத்திட பணிகளை மேற்கொண்டு பயனாளிகள் பயன்பெற செய்ய வேண்டும்.

அரசின் பல்வேறு முக்கியமான திட்டங்களை செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள நீங்கள் அனைவரும் அரசிற்கும் பொதுமக்களுக்கும் பாலமாக செயல்பட்டு சேவையாற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின் போது, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி.மார்க்கண்டேயன், ஊர்வசி செ.அமிர்தராஜ், மேயர் பெ.ஜெகன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை துணைச் செயலாளர் மு.பிரதாப், அரசு உயர் அலுவலர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விருதுநகர் – வெம்பக்கோட்டையில் மூன்றாம் கட்ட அகழாய்வு!

# சுடு மண்ணால் ஆன விளையாட்டுப் பொருட்கள் கண்டுபிடிப்பு!

## சங்கு வளையல்கள், ஆணிகள் கண்டெடுப்பு!

விருதுநகர், நவ. 15–

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை 3ம் கட்ட அகழாய்வில் சுடு மண்ணால் ஆன விளையாட்டு பொருள், சங்கு வளையல்கள், ஆணி உள்ளிட்டவை கண்டெடுக்கப்பட்டுள்ளன

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் 3ம் கட்ட அகழாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மூன்றாம் கட்ட அகழாய்வில் இதுவரையிலும் தோண்டப்பட்ட 14 குழிகளில் உடைந்த நிலையில் சூடு மண் உருவ பொம்மை, சதுரங்க ஆட்டக் காய்கள், கண்ணாடி மணிகள், வட்ட சில்லு, தங்க மணி உள்ளிட்ட 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் புதிதாக தோண்டப்பட்ட குழியில் விரலால் சுண்டி விளையாடப்படும் சுடுமண்ணால் ஆன விளையாட்டு பொருள், சங்கு வளையல்கள், ஆணி உள்ளிட்டவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. முன்னோர்கள் விளையாட்டுக்கு முக்கியத்துவம் அளித்ததற்கு சான்றாக பல்வேறு பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் தற்போது விரலால் சுண்டி விளையாடப்படும் பொருள் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது

### அரிமா சு.சேகர் முன்னிலை!

### டாக்டர் பி.சாய் லட்சுமிகாந்த் பங்கேற்பு!

# 177வது வட்டக் கழக பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் பொ.த.மதிவாணன் அறிக்கை!

சென்னை நவ.15-

வேளச்சேரி மேற்கு பகுதி, 177 வது வட்ட பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இதுகுறித்து வட்ட கழக செயலாளர் பொ.த.மதிவாணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி, 177வது வட்டக் கழக பாக முகவர்கள் பி.எல்.எ.2 ஆலோசனை கூட்டம் இன்று (15.11.2024 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் பொ.தனசேகரன் மாளிகை, வட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு வேளச்சேரி மேற்கு பகுதி செயலாளர் அரிமா.சு.சேகர் முன்னிலை வகிக்கிறார். வட்டக் கழகச் செயலாளர் பொ.த. மதிவாணன் தலைமை ஏற்கிறேன். முக்கியம் வாய்ந்த இந்த கூட்டத்தில் வேளச்சேரி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் டாக்டர் பி.சாய் லட்சுமிகாந்த் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்.

எனவே இக்கூட்டத்தில் வட்ட கழக நிர்வாகிகள், வட்டத்தில் அடங்கிய பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழகத்தின் அனைத்து பாக முகவர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பொ.த.மதிவாணன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


